1975 மார்ச் 8]

அது 3-ம் தேதிக்குள் எல்லா எஸ்.ஈ. க்களுக்கும் போய்ச் சேர்ந்து விட்டது என்பதை நானே பார்த்துவிட்டேன். அங்கத்தினர்கள் கூறிய இந்த யோசனையால் மின்சார வாரியத்திற்கு வர வேண்டிய 7 கோடி ரூபாய் வருமானம் ஒன்ணே முக்கால் கோடியாகக் குறைந்து போய் விட்டது என்பதைத் தெரிவித்துக் கொள்ளு கிறேன்.

திரு. கே. ரங்கநாதன் : *இந்தத் திட்டங்கள் எப்போது முடி வடையும் என்று அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : *இதற்கான முதல் தவணை இப்போது தான் வந்திருக்கிறது. இந்த அடிப்படையில் இந்தத் திட்டம் முடிவடைவதற்கு 2, 3 ஆண்டுகள் ஆகும்.*

Graphite deposits

° 240 *Q.*—THIRU N. K. PALANISWAMY : Will the Hon. the Minister for Industries and Electricity be pleased to state—

(*a*) whether any experiment has been conducted by the Government in recent times to convert graphite into diamond; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : *(அ) இல்லை.*

(இ) வினாவிற்கு இடமில்லை.

Export of Aluminium cables

° 241 *Q.*—THIRU G. R. EDMUND : Will the Hon. the Minister for Industries and Electricity be pleased to state—

(*a*) whether a large quantity of Aluminium cables have been airlifted from the Aluminium Industries in this State in February-March 1974; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : *(அ) இம் மாநிலத் திலிருந்து அலுமினிய கம்பிச் சுருள்களை விமானங்களில் ஏற்றிச் சென்றதுபற்றி அரசிடம் தகவல் எதுவுமில்லை.*

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. க. உரோ. எட்மண்ட் : இப்படி ஏதாவது நடைபெற்று இருக்கிறதா என்பதைப் பற்றி விசாரணை செய்ய அரசாங்கம் ஏற்பாடு செய்திருக்கிறதா ? என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : நமது மாநிலத்தில் அலுமினியம் கேபிள் தயாரிக்கின்ற நிறுவனங்கள் நான்கு இருக்கின்றன. அவை மால்கோ கம்பெனி, கோயம்புத்தூர், ஒமேகா இன்ஸ்லேட்டெட் கேபில்ஸ், மதராஸ், மதராஸ் ஒயர் புராடெக்ட்ஸ், மதராஸ், பிரேம் ராஜ் அண்டு கண்பத் ராஜ் கம்பெனி, மதராஸ் ஆகிய இந்தப் கம்பெனிகளை விசாரித்தோம். விமானம் மூலம் வெளிநாட்டிற்கு அலுமினியக் கம்பிச் சுருள்களை அனுப்பியதாகத் தகவல் இல்லை என்று தெரிவித்தார்கள்.

திரு. கே. ஏ. வகாப் : மால்கோ போன்ற பெரிய அலுமினியக் கேபிள் உற்பத்தி செய்யும் கம்பெனிகள் மத்திய அரசாங்கத்தின் அனுமதியைப்பெற்று நேரிடையாக மற்ற மாநிலத்திலிருந்து விமானத்தில் அனுப்பியிருக்கிறார்களா ? நம்முடைய மாநிலத்தில் பற்றுக்குறை இருக்கும்போது இது போல் வெளிநாடுகளுக்கு அனுப்புவதற்கு எப்படி அனுமதிக்கலாம் ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இந்த நான்கு நிறுவனங்களிலும் விசாரித்தோம். மத்திய சர்க்கார் அல்லது மாநில சர்க்காரின் அனுமதி பெற்று வெளிநாட்டிற்கு விமானத்தில் ஏதும் அனுப்பவில்லை என்று தகவல் தந்திருக்கிறார்கள். மற்ற மாநிலங்களைப் பற்றித் தெரியாது.

நகராட்சி மன்றங்கள் மலர்கள் வெளியிடுதல்.

* 242 **வினா—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நகராட்சி மன்றங்கள் நடத்தும் கண்காட்சிகளை ஒட்டி வெளியிடும் மலருக்கென நன்கொடை வசூலிப்பதையோ, விளம்பரத் தொகை பெறுவதையோ கட்டுப்படுத்தி நகரசபைகளுக்கு அரசு உத்தரவு ஏதேனும் அனுப்பியுள்ளதா ?

(இ) ஆமெனில், அதன் விவரம் என்ன ?